This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# பதினாலு நாட்கள்

டில்லி
01.12.1971

அன்புள்ள என் கணவருக்கு,

நானும் குழந்தையும் 28–ம் தேதி டில்லி வந்து சேர்ந்தோம். ஸ்டேஷனுக்கு நீங்கள் வரவில்லை என்ற போதே எனக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. உங்கள் நண்பர் ஸ்க்வாட்ரன் லீடர் ராம்தாஸ் வந்திருந்தார். ரொம்பவும் அன்பாக விசாரித்தார். நீங்கள் அவசரமாக டில்லியை விட்டு வேறு இடத்தில் 'போஸ்ட்டிங்'கில் போயிருக்கிறீர்கள் என்றும் எந்த இடம் என்று தெரியாது என்றும் சொன்னார். நீங்கள் அவசரத்தில் கிறுக்கி இருந்த கடிதத்தையும் கொடுத்தார்.

எனக்கு முதன்முதல் என்மேல் மிக ஆத்திரமாக வந்தது. அவ்வளவு பிடிவாதம் பிடித்து கல்யாணத்துக்கு போய்த்தான் ஆக வேண்டும். உங்களுக்கு லீவு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை என்று தனியாகப்போய் விட்டு வந்த எனக்கு இந்தத் தண்டனை– உங்களைப் பார்க்க முடியாத தண்டனை – வேண்டும்தான்.

உங்களைப்பற்றி என்னால் கவலைப்படாமல் இருக்க முடியவில்லை. நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? மொட்டையாக ஒரு அட்ரஸ் கொடுத்திருக்கிறார்கள்.

இரவு 'ப்ளாக் அவுட்' அமாக்களங்களையும் சைரன்களையும் ரேடியோ செய்திகளையும் பார்க்கும்போது நீங்கள் எந்த விமானத்தில், எந்த பிரதேசத்தில், எங்கே பறந்து கொண்டிருக்கிறீர்களோ, என்ன என்ன அபாயங்களுக்கு இடையில்... ப்ளீஸ், திரும்பி வந்து விடுங்கள்.

உங்கள் பையன் அப்பா எங்கே, பாகிஸ்தான்காரனை **ஷூட்** பண்ணப் போயிருக்காறா என்று தொளைக்கிறான். நாள்பூரா வராமல் ஏரோப்ளேன் விட்டுக்கொண்டிருக்கிறான். மாமா வந்து உன் புருஷன் ஃபைட்டர் பைலட்டா, பாம்பர் பைலட்டா என்று தெரியாதது போல் விசாரித்துவிட்டு திகில் ஊட்டுகிறார். ஏர்ஃபோர்ஸ்காரனைக் கல்யாணம் செய்து கொண்டால் இப்படித்தான் என்று நீங்கள் அடிக்கடி சொல்லுவது ஞாபகம் வருகிறது. 'கவலைப்படாதே. நான் போனால் உனக்கு ஆயிரம் ரூபாயும் ஒரு தையல் மிஷினும் தருவார்கள்' என்று சொல்...சே! அடித்து விடுகிறேன்.

நீங்கள் திரும்பி வந்ததும் உங்களைச் சற்று நேரம், ஒரு அரைமணிநேரமாவது அப்படியே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் தோன்றுகிறது.